செ.வெ.எண்:42 நாள்: 22.12.2020

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956ஆம் நாளினை நினைவு கூரும் வகையில் தமிழ் ஆட்சிமொழிச் சட்ட வாரம் 23.12.2020 முதல் 29.12.2020 வரை அரியலூர் மாவட்டத்திலுள்ள அரசு அலுவலகங்கள், வணிக நிறுவனங்கள், கடைகள், உணவகங்கள் ஆகியவற்றில் ஆட்சிமொழிச் சட்ட வாரத்திற்கான ஒட்டுவில்லைகள் ஒட்டியும், துண்டறிக்கை மற்றும் அரசாணையினை வழங்கியும் கொண்டாடப்பட உள்ளது. மேலும் இந்நிகழ்ச்சியில் தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், தமிழ் அமைப்புகள் மற்றும் இளந்தமிழர் இலக்கியப் பட்டறை மாணவர்கள் ஆகியோர் சமூக இடைவெளியோடு பங்கேற்க உள்ளனர் என என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**